வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 526/2020

வழக்குசாட்சி PW3

| பெயர் | சீனிவாசன், உதவி ஆய்வாளர் , பால்பண்ணை காவல் நிலையம் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | லட்சுமணன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 53 |

தேதி 11.02.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மாதவரம் பால்பண்ணை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் ராஜசேகரன் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் கால விரையம் கருதி வழக்கு கோப்புகளை கையாள்வதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். புலன் விசாரணை அதிகாரியான ஆய்வாளர் ராஜசேகரன் என்பவர் நிலைய பணியில் இருந்தபோது கடந்த 19.09.2019 அன்று பகல் 2 மணிக்கு வள்ளி அளித்த புகாரினை பெற்று எம்.2 மாதவரம் பால்பண்ணை காவல் நிலைய குற்ற எண். 288/2019 இதச பிரிவு 380, 511 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மேற்படி புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது முறையே அ.த.சா.ஆ.1, 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் இவ்வழக்கின் சாட்சி வள்ளி, இந்திரா, சித்திரா யை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே பகல் 02.30 மணிக்கு சாட்சிகளான இந்திரா, சித்திரா ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அவை முறையே அ.த.சா.ஆ.3 மற்றும். அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் எதிரியை அவர் தேடிவந்த நிலையில் அன்றைய தினமே மாலை 5 மணிக்கு பேங்க் காலனி அருகே கைது செய்து அவர் தன்னிச்சையாக முன்வந்து அளித்த

ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் கார்த்திக், சாமுவேல் முன்னிலையில் பதிவுச் செய்து அதே சாட்சிகள் முன்பு எதிரியிடம் இருந்து வழக்கு சொத்தான கார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதிஅ.சா.ஆ.5, ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர்அ.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிநீதிமன்றகாவலுக்குஉட்படுத்தப்பட்டார்.

4. எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தடைய பொருளானது நீதிமன்றத்தில் படிவம்95 ன் மூலமாக சான்று பொருளாகவும் RP No. 19/2019 ஆகஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி படிவம்95 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்தான காரின் புகைப்படம் ( 2 எண்ணிக்கை) அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சான்று பொருளானது புகார்தாரரால் மனுசெய்து நீதிமன்றத்தில் இடைக்காலமாக ஒப்படைவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீதுஇதச பிரிவு380, 511 ன்கீழ் குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார்.

குறுக்கு விசாரணை

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் ஆமாம். ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். புலன் விசாரணை அதிகாரி சரியான முறையில் விசாரணைச் செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.